
# சூரியப் புதல்வர்கள்



மாவீரர்நாள்

நவம்பர் 27

2001

eelamhouse.com



எமது தாயக விடுதைலப் பயணத்தில் இதுவரைக்கும் பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் தமது உயிர்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள்.

விடுதலைப் பாதையில் அவர்கள் கடந்து வந்த துன்பங்கள், துயரங்கள் பல. தமது இலட்சிய உறுதியாலும், தன்னலமற்ற செயலாலும், தியாகங்களாலும் தாய்மண் மீதும், தமது மக்கள் மீதும் அவர்கள் கொண்ட பற்றாலுமே இவற்றையெல்லாம் அவர்கள் கடந்து வந்தவர்கள். எமது விடுதலைப் போராட்டத்தை தளர்ந்து போகவிடாது இதுவரைக்கும் நகர்த்திவந்தனர்.

தன்னலமற்ற செயல்களாலும், தூய்மையான வாழ்வாலும், இலட்சியத்திற்காக தமது உயிர்களை அர்ப்பணித்ததாலும் அவர்கள் புனிதமானவர்களாகின்றார்கள்.

அவர்கள் பாதம் பட்டதால் எமது மண் புனிதம் பெறுகின்றது. அவர்கள் புதைந்து கிடக்கும் பூமி பலம் பெறுகின்றது. தமிழீழத்தின் உறுதிமிக்க அத்திவாரக் கற்களாக அவர்கள் நிலைக்கின்றனர். தமிழீழ தேசமெங்கும் பரந்து, மண்ணிலும், விண்ணிலும், கடலிலும் எம்மைக் காத்துநிற்கின்றார்கள். அவர்களின் வாழ்வும் செயலும் எமது இலட்சியப்பற்றை இன்னும் பலப்படுத்துகின்றன. அவர்களின் பாதையை தொடர்ந்து நாமும் உறுதியுடன் தடம் பதிப்போம். அவர்கள் இலட்சியத்தை ஈடேற்றுவதே எமது பணியாகும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.



eelamhouse.com



eelamhouse.com

எமது மண்ணிற்காக விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம் உயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந்த நன்னாளில் ஆன்மக் கதவுகளை அப் புனிதர்களுக்காக திறந்து கொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக்காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.

மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை. அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அவர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில், நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்துகொள்வோம்.



## “மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள்”

2000ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு
தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து.



eelamhouse.com

# நாம் சூரியக்குழந்தைகள்

சூரியேன
உன் கதிர்கள் நாம்
அதனால் தான் எம்மை
ஒருவராலும் சுட்டெரிக்க முடியவில்லை
நீ
வெப்பத்தின் தந்தை
நாம்
வெப்பக் குழந்தைகள் - அதனால் தான்
எதிர்ப்பவர்களை எல்லாம்
எரிக்க முடிகின்றது.
நீ
மறைந்தாலும் மீண்டும் மீண்டும்
உதித்துக் கொண்டிருக்கின்றாய்
அதனால் தான் நாமும்,
விழுந்தாலும் விதையாகி
முளைத்துக் கொண்டிருக்கிறோம்.
மாவீரரான மகத்தான
ஓவியர்கள் தீட்டிய
சிவப்புச் சித்திரங்கள்,
உன் பெயரில்
ஒளிர்ந்து கொண்டிருக்கிறோம்,
சூரியன்
தன் கதிர்களை ஒருபோதும்
சுட்டெரிக்கப் போவதில்லை,
அதுபோல்,
சூரியனை சுட்டெரிக்க
ஒரு சூரியன்
உதிக்கப் போவதுமில்லை.



-மாவீரர் மேஜர் அமுதா
மாலதி படையணி.

சூரியப் புதல்வர்கள்

eelamhouse.com

ஈன்ற பொழுதென்ன என் மகவுகளால்
இன்றைய பொழுதே பெரிதுவப்பு!



1998 மாவீரர்நாளின்போது கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரனாகிப்போன தன் மகனின் விதைகுழிக்கருகிலிருந்து, நீண்டநாட்களின் பின் சந்தித்த தனது போராளி மகளிடம் தன் உணர்வைப் பகிர்ந்துகொள்ளும் தாய்.

eelamhouse.com

# மாவீரர் நாள் 2001




ஈழத்தமிழர் மட்டுமன்றி உலகத்தமிழரெல்லாம்
ஒரு தடவை குலுங்கி நிமிரும் நாள்;
கனத்த மனங்களுடன் கையில் மலரேந்தி
கல்லறைக்குத் தூவும் திருநாள்;
கலங்கும் கண்களுடன் தீபம் ஏற்றி,
காவிய வீரரை அஞ்சலிக்கும் பெருநாள்;
தான் பிறந்த மண்ணையும் மண்ணின்
மனிதர்களையும் நேசித்ததனால்
போராளியாகப் புறப்பட்டு, புலியாகி– புயலாகி
களமாடி வீழ்ந்த வீரப்புதல்வர்களின் விழாநாள்;
வன்னிப்பெருநிலப்பரப்பு இன்னொரு மாவீரர்
நாளை எதிர்கொள்ளத் தயாராகின்றது;
துயிலுமில்லங்களில் உறைந்திருப்பவர்கள் தமது
உறவுகளின் சந்திப்புக்காகக் காத்திருக்கிறார்கள்;
தமது கல்லறைகளைத் தழுவும் தாயின்
ஸ்பரிசத்தையும், வருடிவிடும் தோழர்களின்
தொடுகையையும், மலர்தூவும்
உறவுகளின் வாஞ்சையையும் அவர்களால்
உணர்ந்துகொள்ள முடியும்;
மாவீரர் துயிலுமில்லங்களில் ஏற்றப்படும்
தீபங்களில் எத்தனை பேரின் தியாகம் ஒளிர்கிறது!
வழமையான மாவீரர் தின உணர்வுகளைவிட
இந்த வருட மாவீரர் தின உணர்வின் அலைகள்
கொஞ்சம் வித்தியாசமான
தாக.... ஆழ்ந்த துயரம் ததும்பியதாக இருக்கும்
பெற்றோர் சகோதரர் உறவினருடன் கூடவே
சின்னஞ்சிறு குழந்தைகளும் இம்முறை தமது
பிஞ்சுக் கரங்களினால்
தமது தந்தைமாருக்கு, தமது தாய்மாருக்கு,
தீபம் ஏற்றப்போகிறார்கள்;
தமிழீழ போராட்ட வரலாற்றில் ஏற்பட்ட பாரிய
திருப்பம் இது;
மக்கள் படை திரண்டு எழுந்து எல்லை
காக்கப்போன வரலாறு இது;
எத்தனை இளம் கணவர்மார்...
எத்தனை இளம் தந்தைமார்...
மண்ணுக்காய் மரணத்தை ஏற்றுக் கொண்ட இந்த


eelamhouse.com



எல்லைப்படை ஆண் பெண் வீரருக்கு உலகமே தலை தாழ்த்தி அஞ்சலி செய்கிறது.
ஆறு மாதக்குழந்தைக்கு தன் கையால் சோறு தீத்த வருவேன்
என்று சொல்லி எல்லைக்குச் சென்ற தந்தை திரும்பிவரவில்லை,
அடுத்தவேளைச் சோற்றுக்கே
வழியில்லாத நிலையில் கூட
மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு விட்டு
எல்லை காக்கப் போனவர் வரவில்லை,
திருமணமாகி சில மாதங்களே ஆன நிலையில் களத்துக்குப்
போன இளம் கணவர்மார் கூட திரும்பி வரவில்லை.
இப்படி இந்த மண்ணுக்கான பங்களிப்பு எத்தனை
விதமாய் விரிகிறது.
போராளிகளின் பின்னால் மக்களும் அணிவகுத்து நின்று
எதிரியை விரட்டிய எழுச்சி இந்த மண்ணில் நிகழ்ந்து
கொண்டிருக்கின்றது.
வன்னிப்பெருநிலப்பரப்பு காலம் கடந்து நிற்கப்போகின்ற
இந்த வீர வரலாற்றை தனக்குள் பதிவு செய்து கொண்டிருக்கிறது.
களத்தில் போராடும் போராளிகளுக்கு தோள் கொடுத்த
மக்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் காலத்தின்
சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகிறது.
ஆண்களும் பெண்களுமாய் எழுதிய சரித்திரம் இது;
இவர்களின் ஆன்மாவின் ராகங்கள் தமிழீழக்காற்றில்
என்றைக்கும் கேட்டுக் கொண்டிருக்கும்.

- அங்கயற்கண்ணி
தமிழீழம்.


eelamhouse.com

# வழித்தடம்

தூ தூரத்தே கேட்ட சத்தம் வரவர இப்போது அதிகரித்துக் கொண்டிருப்பதைப் போல இருந்தது. நிசப்தமான அன்றைய சூழலை இடைவிடாத அந்த இரைச்சல் ஓசை பயங்கரமானதாக மாற்றியது. அவர்களுக்கு இது வழமையானதுதான். எனினும் ஏதோ ஒரு அசாதாரணம் இன்று இருப்பதாக அவர்களுக்குப்பட்டது.

எதிரி விளக்குவைத்தகுளம் வரை முன்னேறியிருந்தான். அது வன்னியின் ஒரு காட்டுக்கிராமம். வவுனியாவிலிருந்து வடக்காக கண்டி பிரதான வீதியில் இருந்தது. முன்னேறும் இராணுவத்தை கட்டம் கட்டமாக புளியங்குளம் வரை தடுத்து தாமதப்படுத்துவது என்பது திட்டமாக இருந்தது. முன்னேறும் இராணுவத்தை தாக்கி, தடுத்து, தேவையானபோது நகரவிட்டு மீண்டும் தாக்கி, இப்படி புளியங்குளத்தில் அமைக்கப்பட்ட கொலைப்பொறி நோக்கி இராணுவத்தை கவர்வதற்காய் ஜெயசிக்குறு படைகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன.

06-06-1997 விளக்குவைத்தகுளம் முன்னரங்க நிலைகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளிகள் நின்றார்கள். காலை அமைதியாக விடிந்தது. எனினும் அதிகாலை முதல் கேட்டவாறிருந்த அந்தச் சத்தம் மட்டும் நிற்கவேயில்லை. மெல்ல மெல்ல அந்தச் சத்தம் அவர்களை நோக்கி நகர்வதாகப்பட்டது.

மச்சான், டாங்கிச்சத்தம் போல கிடக்குது

அவர்களில் ஒருவன் காவலரணொன்றின்மேல் ஏறி நின்று அவதானித்துவிட்டுச் சொன்னான்.

இண்டைக்கு திருவிழாப்போல இருக்குது

அவர்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள்.


டேய்! வந்தா வரட்டும், எங்கட பொசிசனைக் கடந்து போறதை ஒருக்காப் பாப்பம்.

இப்படித்தான் எப்பவுமே அவர்கள் கதைத்துக் கொள்வார்கள். இன்றும் அதே போலவே கதைத்தவாறு காலைக் காவலுக்கான ஒழுங்குகளில் ஈடுபடத் தொடங்கினர்.

விரைவிலேயே அவர்கள் எதிர்பார்த்த திருவிழா தொடங்கி விட்டது. அவர்களின் முன்னரங்க நிலைகளைச் சுற்றி எதிரி ஏவிய பீரங்கிக் குண்டுகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. இதுவரை தூரத்தே கேட்ட இயந்திரங்களின் உறுமல் ஓசை அவர்கள் இருந்த திசையில் நெருங்கத் தொடங்கியது. முறிந்து விழுந்த காட்டு மரங்களினூடு வெடித்துச் சிதறிய எறிகணைகளின் கந்தகப்புகை பரவிக் கொண்டிருந்தது.

கப்டன் அறிவு, அவன்தான் காவலரண் துவாரத்தினூடாக தூரத்தே தெரிந்த கரிய உருவத்தை முதலில் அவதானித்தான். டாங்கி அவனது நிலையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சண்டையின் தீவிரம் சற்றுக்கூடியிருப்பதாகப்பட்டது. தோழர்கள் தமது துப்பாக்கிகளால் எதிரி மீது சுடத் தொடங்கினர். சண்டை உக்கிரம் கண்டது. கனரக ஆயுதங்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. டாங்கி




eelamhouse.com

எதிர்ப்பு ஆயுதங்களும்தான். இலகு இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்ட ரவைகள் வெறுமனே டாங்கியில் பட்டுத் தெறித்து விழுந்தன.

முன்னரங்கில் இருந்த எமது நிலைகள் ஒவ்வொன்றாய் எதிரியால் சிதைக்கப்பட்டன. வீரர்கள் வீழ்ந்துகொண்டிருந்தனர். டாங்கி ஏவிய ஒரு எறிகணை அறிவினுடைய தோழர்களை வீழ்த்தியது. சிதைந்த நிலைகளில் இருந்து சென்றுகொண்டிருந்த இறுதி எதிர்ப்புகளும் குறைந்து கொண்டிருந்தன. எதிரி உற்சாகமடைந்திருந்தான். வேகமாக டாங்கியை நகர்த்தினான்.

அறிவினுடைய சிதைந்த காவலரணில் இப்போது வீரச்சாவடைந்துவிட்ட தோழர்களின் வித்துடல்களும் ரவை முடிந்துவிட்ட துப்பாக்கிகளும் மட்டுமே தனித்திருந்தன.

அந்தக் காவலரண் வரிசையில் எஞ்சியவர்களில் அவன் மட்டுமே தனித்திருந்தான். எதிரியின் நகர்வை தடுத்தேயாகவேண்டிய கட்டாயம் அவனுக்கிருந்தது. முறியடிப்பு அணிகள் அங்கே வரும்வரை இராணுவத்தின் நகர்வை குறைந்தபட்சம் தாமதப்படுத்த வேண்டிய நிலையை அவன் மட்டுமே உணர்ந்தான்.

கைவசம் இருந்த குண்டுகள் இரண்டுடனும் சிதைந்த நிலையைவிட்டு வெளியே வந்தான். அவனது நிலையை நோக்கி வந்த டாங்கி இப்போது மிகவும் நெருங்கியிருந்தது. அறிவு எறிந்த முதலாவது குண்டு டாங்கியின் முன்னால் வெடித்துச் சிதறியது. டாங்கி அதிர்ந்து நின்றது. ஆனால், விரைவிலேயே அதன் சக்கரங்கள் மீண்டும் உருளத் தொடங்கின.

இறுதியாக, அவனிடமிருந்ததோ ஒரேயொரு கைக்குண்டு. அவனுக்கிருந்த கடைசித் தெரிவு டாங்கியை மிக நெருங்கி குண்டை எறிவது, அல்லது சொற்ப கணத்தில் இடித்துச் சிதைக்கப்பட இருந்த நிலையின் அருகிலிருந்து பின்வாங்கிச் செல்வது.

இறுதி முயற்சி எமது மரபுக்கேயுரிய தெரிவு. டாங்கி அவனது காவலரணை முட்டிமோத இருந்த கடைசித் தருணத்தில் தன்னிடமிருந்த கையெறிகுண்டை வெடிக்க வைத்தான்.

தனது சாவிற்கான முடிவு அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. எனினும், அவன் கோழையாகிப் போக விரும்பவில்லை. அவன் நேசித்த மண்மீது, டாங்கியின் சக்கரங்களால் சிதைக்கப்பட்ட அவனது வித்துடல் கிடந்தது. இறுதிவரை அவனிடம் உயர்ந்திருந்த துணிவு வரலாற்றில் இன்று அவனை உயர்த்தி நிற்கின்றது.

## அன்பு











eelamhouse.com

# சரிதமாய் வாழவே போகின்றார்

போகின்றார் மாவீரர் போகின்றார் - பகை
போர் வென்றார் சாவென்றே போகின்றார்

கொற்றவன் பெரும்படை வகுத்தணி செல்ல
முழங்கிசை கரையவே போகின்றார் - மலர்
சாற்றிய ஊர்தியில் செங்கொடி போர்த்தியே
மரியாதையோடிவர் போகின்றார்.
நற்றமிழ் தாய்மண்ணின் பெருங்கடன் முடித்து
பொன்முடி சூடியே போகின்றார் - இவர்
பெற்றவள் கதறவே யெம்தேச மக்களும்
வெம்மியே சாரையாய் போகின்றார்.



உடல்தனை மண்ணுக்கும் உயிரினை தமிழுக்கும்
உணர்வோ டளித்தே போகின்றார் - தன்
திடங்கொண்ட பருவமிடுக்கு மேனியில்
பூக்கள் சொரியவே போகின்றார் - வீட்டு
படலையில் தீபம் நிறைகுடங் கருங்கொடி
தோரணந் தொங்கவே போகின்றார் - ஆழ்
கடலினைப் போல் பெரும் காவியம் படைத்து
காவலர் தீரர் போகின்றார்.

போர்ப்புலி வீரர் வீழமுன் மண்ணில்
வேங்கைக ளாயிரம் முளைக்கின்றார்
மார்பினைத் தட்டியே மானத்துள் வாழ்ந்திவர்
மண்டியிடாமலே போகின்றார் - எம்
ஊர்வாழ வுயிர்தந்த மாசற்ற மாவீரர்
துயிலில்லம் நாடியே போகின்றார் - இவர்
பேர்சொல்லி நாளை தமிழர்கள் நெஞ்சினில்
சரிதமாய் வாழவே போகின்றார்.

– கோ. திருநாமம்





eelamhouse.com

# தொலைதூர நட்சத்திரம்



போராளி இசையழகன்

வஞ்சகமில்லா வரிப்புலியே!
நெஞ்சகத்தினுள்ளே விடுதலை நெருப்பினை
சுமந்த நேரியனே!
கச்சதீவுக் கடலன்னை மடியினிலே
கொடிய பகைவனுடன் நிகழ்ந்த சமரினிலே
வித்தாகிப் போன வீரனே!
அனைத்துலகத் தொடர்பகத்தின்
அரிய சொத்துகளுள் நீயும் ஒருவன்.
போராளியாய் பொறுப்பாளனாய்
எம்முன்னே நீயிருந்தாய்.
எளிமையுடன் நீ வாழ்ந்தாய்
பெருமையில்லாத உன்னுள்ளம்
போர்க்களத்தில் பொங்கியெழும் உன்வீரம்
உந்தன் இதழ் தன்னில் தவழ்ந்து வரும் புன்னகை
எல்லாமே உனக்கே உரியது.
பழகுவதில் பண்பாளன்
பேசுவதில் பேச்சாளன்
நாடகத்திலும் நீ நடிகன்
எல்லாப்பக்கத்திலும்
உனக்கொரு பகுதி இருக்கிறது.
நீ கால் பதித்த இடமெல்லாம்
உந்தன் பெயர் சொல்லுதே.
நீ சுமந்த சுடுகலன்கள்
உன்னைத் தேடியழுகின்றதே.
உந்தன் வித்துடல் தானும்
எங்கள் விழி காணவில்லையே
உன்னை தோளில் சுமந்திடக்கூட
எமக்குக் கொடுத்து வைக்கவில்லையே
நேற்றுவரை எம்மோடு நீயிருந்தாய் - எம்
எல்லை தாண்டி வந்த பகைக்கு
எறிகணைகளால் பதில் சொன்னாய்.
எங்கள் பீரங்கிப் படையணியிலும்
உந்தன் சாதனையுண்டு.

கச்சதீவுக் கடலலையே!
எந்தன் தோழன் வித்துடலைக் கண்டாயா?
கடலலையை தழுவி வரும் காற்றே!
எந்தன் தோழன் வித்துடலைப் பார்த்தாயா?
வங்கக்கடல் கடந்து வரும் சைபீரிய வாத்தே!
வரும்வழியில் வல்லதலைவன் வழிநின்று
கடலதிலே களமாடி விழுதாகிப் போன
வீரனைப் பார்த்தாயா?
வீதியெங்கும் தோரணங்கள் தொங்கிடுதே
உந்தன் திருவுருவப்படமருகே
குத்துவிளக்குகள் அழுகுதே
உன்னை தெரிந்தவர்கள் விழிகளில்
கண்ணீர் ஆறாய்ப் பெருகுதே
உன் கனவினை, நினைவினை
சுமந்திடும் தோழர்கள்
விழிகள் சிவக்குதே
வீரனே!
உந்தன் விடுதலையுணர்வினை
தாங்கிய இதயங்கள்
தலைவனின் வழியினில்
எதிர்வரும் தடைகளை உடைத்து நகரும்
நாளை எம் வானத்தில்
புலிக்கொடி பறக்கும்.
எம் தேசம் உங்கள் ஈகத்தால்
தலை நிமிரும்.

**********

eelamhouse.com

நெஞ்சு நிமிர்த்தியதொரு வாழ்வு
எம்முன் நீள விரிகிறது
எம் மண்ணில் தங்கியிருந்த
பகைவீடுகள் பஞ்சாய் எரிகிறது,
பிரபாகரன் செய்திடும் போரினைப் பார்த்து
பாரே வியக்கிறது.
எங்கும் ஓயாத அலைகள் மூன்று என்ற கதை
வானில் மிதக்கிறது
பொல்லுப் பிடித்த கிழவர் கைகள்
ஏ.கே. சுமக்கிறது.
பிள்ளை சுமந்த தாயின் கண்கள்
எல்லை காக்கிறது.

எம்மை அடையாளப்படுத்தி வாழ்ந்த
காலம் காணாமல் போகிறது.
களனிகள், காடுகள், வீடுகள் எங்கிலும்
கண்ணி வெடிகள் வைத்தவர்
உயிர்கள் பிரிகிறது.
சங்கேத மொழியினில்
பெயரினை சூட்டி,
புறப்பட்டு வந்த பகைச்சேனைகள்
பிணமாகிப் போகிறது.
அதைப் பொறுப்பேற்கக்கூட
சிங்களம் தன் பொறுப்பினை இழக்கிறது.
பொருண்மியத் தடையது கண்டு




கருவறை மீதினில் கருவினைச் சுமப்பவள்கூட
கணவனை விடுதலைப் போருக்கு அனுப்புகிறாள்.
இறுதிப்போரே
இனியும் ஒதுங்கோம் என்று கூறி
போர்க்களமதிலே ஏறி நடக்கிறது
மக்கள் போர்ச் சேனை.
வீதி வழியில் இருந்த வாழ்வு
வீடு திரும்புகிறது
வீட்டின் முன்றலில் இருந்து
பிள்ளைக்கு நிலாக்காட்டும்
காலம் எம் கையில் சேர்கிறது.
பலவண்ண அட்டைகள் சுமந்து

ஈழத்தமிழர்கள் மனமது
கரைந்து போகாது.
வானிலில் ஏறி வந்திடும்
வல்லூறு போட்டிடும் எச்சங்கள்
எம் உடலினை மட்டுமே தின்றிடும்.
எம் உளத்தினில் பலமதை பலமடங்காக்கிடும்.
வல்லரசுகள் வந்தெங்கள்
சிங்களச் சீமைக்கு
முண்டுகள் கொடுத்திடலாம்.
வல்லதலைவன் எம்முன்
வாழ்ந்திடும் மட்டும்
வல்லரசுகள் எம்முன் தூசாகிடும்.


eelamhouse.com

எம் தெருக்களில் சென்றிகள் போட்டு
எம்மை செக்கிங் செய்திடும் சேட்டைகள் எல்லாம்
செத்தே போகிறது.
விடுதலைப் போரினின் பக்கமே
தமிழரின் வளமது திரும்புது பாரு
எம் நிலம்தனில் ஏறி
வருகின்ற எதிரி பலமது
சாகுது பாரு.
அகிலத்தின் கண்கள்
அம்மையார் செய்திடும் ஜாலத்தில்
மயங்கியே நிற்கலாம்.
தமிழ் மறவர்கள் முன்னது

# றது

நொருங்கியே போகுது.
வேசங்கள் போட்டு,
வெளிநாடு சென்று,
பலகுழல் வாங்கியே வந்திடலாம்.
பற்பல பயிற்சியை
பலமுள்ள நாட்டினில்
பெற்றுமே வந்திடலாம்.
இவையெல்லாம் கரிகாலன் காட்டும்
பாதையில் சென்றிடும்
வேங்கைகள் முன்னதில் முடமாகிப் போகுமே.
கூனிக்குறுகி, அடிமைச் சேவகம் செய்திடும்
காலங்கள் அழிகிறது.

கோழைகளாக சாவதைவிடுத்து
எம் சந்ததி வாழ்ந்திட
சாவினை அணைத்திடும்
சரித்திரம் பிறக்கிறது.
தரிசுகளெல்லாம் தாய்மையாகி
கருவினைச் சுமக்கிறது.
சிதைவுற்ற இவ்விடமெல்லாம்
சிறப்புற்று நிமிர்கிறது,
புரட்சிகள் தாங்கி
பரலிகள் எல்லாம்
ஈழக்காற்றினில் மிதிக்கிறது.
ரத்வத்தை மாமா கொடுத்திட்ட
தவணைகளெல்லாம் கை மீறிப் போகிறது.
கரிகாலன் போட்டிட்ட திட்டத்தால்
முடமான மாமா
கதையடங்கிப் போகிறது.
காற்றது எங்கள் மண்ணில்
கைவீசி நடக்கிறது.
நேற்று, அழுதிட்ட குயிலினமெல்லாம்
சுதந்திர கீதம் இசைக்கிறது.
முற்ற வெளியினில்
சிங்கக் கொடியேற்றி மகிழ்ந்திட்ட சிங்களம்
இன்று,
மூச்சிழந்து முழி பிதுங்கி நிற்கிறது.
வேட்டையாடி எம்மினத்தினைக் கொன்றவர்
உயிரது நடுங்கிறது.
எங்கள் மாவீரர்கள் வாழ்ந்திட்ட
கல்லறை கிளறிய உயிர்கள் அழிகிறது.
விரைவினில்
எங்கள் தோழர்கள் கல்லறை மீதினில்
நெய்விளக்கேற்றி வணங்கிடும் நாளது வருகிறது.
பிரபாகரன் தலைமையில் தமிழீழம் கண்டிடும்
காலமும் வருகிறது.

- ம. இசையழகன்




eelamhouse.com

# வாயாய் இருந்தோம்...

# செயலாய் வந்தாய்!



தங்க மணித் தமிழ்
ஈழ மண்ணில்
தலை நிமிர்த்தி
எங்கள் பகைபொடி
ஆக எழுந்தாய்
புலியே! நின்னை
வெங்க ளத்திடை
இழந்தோம்... எனினும்
நெஞ்சில் வீரம்
பொங்க நிமிர்ந்தோம்...
தமிழர் வாழ்வின்
பொருள்கண் டோமே!

இன்றெம் மண்மிசை
நீ 'மா வீரர்'
எனும் பேர் தாங்கி
நின்று சாவிலும்
சாகா உயிராய்
நிகழ்த்தினாய் போர்...
வென்றெம் அடிமை
விலங்கு
நொறுக்கினாய்!
வேங்கை உன்னால்
நன்று நிமிர்ந்தோம்...
தமிழர் வாழ்வின்
நலம் கண்டோமே!
நாயாய் இழிவொடும்

நின்றோம் புலியே
நேற்று நாங்கள்...
தாயாய் இருந்த மண்
தாங்க மறந்தோம்...
வெறும் சொல்
ஆர்க்கும்
வாயாய் இருந்தோம்....
செயலாய் வந்தாய்
மடிந்தாய்
பொங்கினோம்...
தீயாய் நிமிர்ந்தோம்!
தமிழர் வாழ்வின்
திறன் கண்டோமே!

**- காசி ஆனந்தன்**

சூரியப் புதல்வர்கள்

eelamhouse.com

# 'நான்' தொலைத்து 'நாங்கள்' காத்தவர்

ஒரு மணித்துளி போதும்!
நினைப்பதற்கும்....
நினைவாலே நெஞ்சம் உருகி...
விழிவழியே மடையுடைத்துப் பாய்வற்கும்
ஒரு மணித்துளி போதும்.
'நான்' தொலைத்து 'நாங்கள்' காத்தவரின்
நினைவுகளால் துடிப்பதற்கு
ஒரு மணித்துளி போதும்.

துடிப்பதற்கும் துயர்படவும்
ஆண்டாண்டாய் மிதிபடவும்...
சபிக்கப்பட்டவன் தமிழன் என்ற எதிரியின் விதியினை
உயிரால் மாற்றிய உயர்ந்தவர்தம் நினைவுகளால்...
புல்லும் தலைசாய்த்து கண்ணீர் சிந்தும்.

அஞ்சுதலும் கெஞ்சுதலும் இல்லா
அகண்ட பெருவாழ்வில் நெஞ்சு நிமித்துதற்கு...
களமாடி வீழ்ந்தவர்தம்... நினைவுகளால்
தேசம் கசிந்துருகும் காலம்.
கல்லும் உருகிக் கலங்கியழும் பொழுதுஇது.

வீரவிதைப்பின் அறுவடையின் நாட்களுக்காய்..
காலம் கருவுறுதல் இப்போது.
நிரையாகத் தீப்பந்தம்.
அதன் பின்னே... துயர்வடியும் முகங்கள்..
சோகம் தாளாமல் விம்மி வெடிக்கும் நெஞ்சங்கள்.
அழுதாற்ற முடியாச் சோகம் தான் என்றாலும்...
மார்படித்துத் துடிக்கும் உறவுகள்..
என்றாலும்... அதற்குள்ளே முளைவிடும் வீரத்தின்
நாற்று.

வீட்டுத் தோட்டத்தில் தாயழும்...
என்றாலும் கட்டறுத்து கன்று துள்ளிக்குதிக்கும்.
ஊர்க்குருவி... வானேவ வீரமாய்க் கத்தும்.
வாசல் கதவில் படர்ந்த மல்லிகை..
எப்போதும் இல்லாது அதிகமாய் மலர் சொரியும்.
மண்ணில் உயிர்ப்புற்ற அத்தனை உயிர்களும்
இன்றேதோ... அழகாகத் தோன்றும்.
புத்தாடை உடுத்தி... புலர்பொழுதில்..
உற்சாகமாக நிற்கும் சிறுவனைப்போல்...
தேசம் பூச்சூடி நிற்கும்.
அற்புதம் விளைந்ததுபோல்... தேசம் மெருகேறிப்
பூரிக்கும்.
இது பேறு காலம்.

கார்த்திகை இருளில்...
பனிதரும் குளிரில்... தேசம் நெருப்புமூட்டும் காலம்.
உயிர்ப் பூவை தூ என்று ஊதி
சாவை மிதிக்கின்ற சரித்திரரின் பேர் சொல்லி
தேசம் சிலிர்க்கின்ற நேரம்.
கூற்றுவனும் பயங்கொள்ளும்
புலி வீரர் பெயர் சொல்லி... தேசம் நிமிர்கின்ற நேரம்.

-ஜெயா



eelamhouse.com

# ஓரடி மண்ணால் உயர்ந்து

ஓரடி மண்ணால் உயர்ந்து நிற்குது
எங்களது தமிழீழம் - அது
போராடி மடிந்தமா வீரர்களின் தமிழ்
வரலாற்றுப் பெருந்தியாகம்
அடிதொழ வேண்டிய சந்தன மாந்தர்
விதையாகப் புதைந்தாரே - இன
விடியலுக்காகவே உணர்வோடுயிர்களை
தேசத்திற்கு ஈந்தாரே.

- கதிரவன்



இன்னுமிவர் நெஞ்சால் எங்களது மண்ணை
தாங்கியே உறங்குகிறார் - தேசம்
கண்ணிரண்டும் கரைந்து மலர் தீபம் ஏற்றி
ஆண்டுதோறும் வணங்குகிறார்.
மண்ணிலிவர் சிந்திய குருதியால் நாடே
சிவந்து கிடக்கிறது - இவர்
கண்ணுறங்கும் கல்லறையில் தமிழீழம் எனுமொலி
இசைந்து கேட்கிறது.

எங்களோடு நேற்று உண்டு பேசி மகிழ்ந்து
வீதியுலா வந்தவர்கள் - எங்கள்
தங்கத் தமிழீழத் தேசியத் தலைவனின்
நீதி வழி நடந்தவர்கள்
சங்க காலம் படைத்த புறங்களை மீண்டுமிவர்
புதுப்பித்துப் போனாரே - மக்காள்
உங்கள் கால் பாதமிவர் உறைவிடம் மிதியாமல்
பக்குவமாய்ப் பதிப்பீரே.

மாலை சர்ப்பம் அணிந்த விசமுண்ட கண்டனையும்
வென்றுதான் நின்றார்கள் - பெரும்
குலையாத மலைபோல் அழியாத சரிதமாய்
ஞாலமதில் நிலைப்பார்கள்.
அலைகடல் வானும் நதிதரைக் காற்றும்
இவர்களைப் பறைசாற்றும் - பூஞ்
சோலை கூடம் மாடம் சாலை சந்தி எல்லாம்
இவர்களின் பேர் விளங்கும்.



eelamhouse.com

எமக்காக செந்நீர் சொரிந்தீர்!

நாம் கண்ணீர் சொரிந்து

வாழ்த்துகின்றோம்

வணங்குகின்றோம்.





தமிழ்த்தாய் நெற்றியிலே திலகமிட்டு புன்னகை பொங்க வழியெங்கும் தமிழினம் தன் மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஓங்க தானைத் தளபதியாம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் வழிநின்ற தியகாத்தின் சிகரங்களே! உங்கள் ஈகைக்கு ஈடேது! தன்னலமற்ற பற்றை, பாசத்தை விபரிக்க வரிகளேது! தமிழினத்தின் மேல்கொண்ட பாசத்தின் வெளிப்பாடும், இலட்சியத்தின் மேம்பாடும், எம் உயிரிலும் மேலானது என்பதை ஈகத்தால், உங்கள் தாகத்தால் காட்டிச் சென்றீர். ஈழத்தாய் தன் பிரதாபத்தால் உங்களை இறுக அணைத்துக் கொண்டாள். அடிமை விலங்குகொண்டு, வேரறுக்கப்படும் தமிழினத்தின் விடுதலையை விரைவுபடுத்தும் வீர காவியங்களே விண்ணுயர உம்புகழ் உயர்த்தப்படும். மறத்தமிழர் நரம்புகளில் உம்முணர்வு ஆறாய் ஓடும். கொக்கரிக்கும் சிங்களத்தின் கொடுமுடி அழியும். வங்கக் கடலோரம் எங்கள் தமிழீழம் மலரும்! அதையே நாம் உங்கள் ஈகைக்குக் காணிக்கையாக பாதங்களில் வைத்து வாழ்த்துகின்றோம்! உம்மை வணங்குகின்றோம்.



eelamhouse.com

# கல்லறையில் உறங்கும் கண்மணியோடு ஒரு சில துளிகள்

செவ்வானம்

அண்ணா நீ போராளியானபோது
நான் சிறியவள்தான் - ஆனால்
இப்போது உனக்கிருக்கும்
உணர்வுகள், வீரம் எல்லாம்
எனக்கும் உண்டு - இதை நீ
மறந்துதானா- அன்று
நான் போராளியாக
பாசறைக்குச் சென்றபோது
ஏன் வந்தாய் என்று
கண்ணீர் வடித்த
கண்களோடு காதோரம்
வந்து கேட்டாயே!
ஓ... அண்ணா அன்று நீ
கேட்ட வார்த்தைகளின்
அர்த்தம் இப்போதல்லவா புரிகிறது
அண்ணா நீ மண்மீட்புப் போரிலே
மடிந்தாலும் உனது இலட்சியத்தையும்
ஆயுதத்தையும் ஏற்கவென உடன்பிறந்தவள்
வந்துவிட்டாளே என
நினைத்து ஆனந்தக்கண்ணீரல்லவா
வடித்துள்ளாய்.



அண்ணா! அப்போதே
உனக்குத் தெரியும் - நீ
நிரந்தரமாக மண்ணை
முத்தமிடப் போகிறாய் என்று,
அதனால்தான் உனது கழுத்தில் ஆடிய
நஞ்சு மாலையில் ஒன்றையும்
எனது கழுத்தில் அணிந்துவிட்டு
என்னை ஆரத்தழுவி முத்தமிட்டபின்
நீ இல்லாவிட்டாலும் உனது
இலட்சியம் நிறைவேறவேண்டும்
என்பதற்காக உனது
நாமத்தையும் எனக்குச்
சூட்டிவிட்டு
கையசைத்தபடி என்னிடம்
இருந்து இறுதிவிடை பெற்றாயே
இப்போது நீ எங்கே
மீளாத்துயில் அல்லவா கொள்கின்றாய்
அண்ணா...! ஒருதரம் உன்
திருமுகம் காட்டமாட்டாயா?
உனது கல்லறைக்கருகில்
உனக்கு இறுதிவிடை கொடுத்த
தங்கையல்லவா வந்து நிற்கிறேன்.
அண்ணா ஒருதரம் விழித்துப்பார்
உனது நாமத்தோடும் - நீ
அணிந்த நஞ்சுமாலையோடும்
உனது ஆயுதத்தோடும் - நீ
எந்த இலட்சியத்தினைச் சுமந்தாயோ - அந்த
இலட்சிய வேட்கையோடும் உன்னருகில்
வந்து நிற்கிறேன்.
எனது ஆசை அண்ணாவே...!
நீ தனிமையில் உறங்குகின்றாயா...?
கவலைப்படாதே - அருகில்
உனது தோழர்களும் உறங்குகின்றனர் - இன்னும்
சில நாட்களில் உனக்கருகில் நானும்
துயில் கொள்ள வருவேன் - எனக்கும்
உனக்கருகில் ஒரு இடம் பிடித்துவை.
உனது பாதச்சுவடுகளில் நானும்...

eelamhouse.com

# மானிடம் பழுத்த மன்னவர்.

மானிடம் பழுத்த மன்னவர்.

கரும்புலி என்றால் கடுஞ்சினங்
கொண்ட
பெரும்புலி என்றே பேசுவர் பெரியோர்
உருவில் மாந்தரை ஒக்கினும் இவரோ
மருமம் நிறைந்த மைந்தர் ஆவர்
சாவும் வாழ்வும் சமமெனக் கொண்டவர்
பூவுல கிதனில் புதுப்புறம் படைப்பவர்
எழுங்கதிர் புயலை எரிமலை இடியை
விழுங்கிய சிந்தையர் வெம்பகை முடிக்கும்
நினைப்பன்றி வேறு நினைப்பிலா வீரர்
கனவிலும் எதிரி கலங்கிட உரப்புவர்
கூற்றினைக் கூடக்குனிய வைக்கும்
ஆற்றல் படைத்தவர் அறிவீர் இவரே
இருளிலும் இயங்குவர் எங்கும் ஏகுவர்
கருதிய இலக்கை கடிதில் தாக்குவர்
பீரங்கி பாசறை பெருங்கடற் கலங்கள்
வீரம் பேசும் வெய்யவர் உடல்கள்
பொடிபடத் தகர்க்கும் புகழ்சால் மறவர்
அடிமுடி அறிய வொண்ணாப் புதிரிவர்
கந்தகம் பொதிந்த கணையென வாகி
செந்தமி ழீழக் 'கடவுண் மாந்தன்'
கையா யுதமெனக் கவின்பெறு
மாண்பினர்



ஐயா யிரமா யிரமாண் டேகினும்
ஆவி கொண்டே அடுமிவ் வரிய
ஏவு கணைகள் போலப் புதிய
ஆயுதம் வருமோ வருமோ ஈழத்
தாயகம் மீட்கத் தற்கொடுத் தெரிவர்
பொருப்பென வருபகை புழுதி யாக்கும்

நெருப்பு மனிதர் நிகரில் தலைவன்
மந்திர மொழியில் மூளுவர் மாற்றார்
எந்திரப் பொறிகளில் சிக்கி இளைப்பரோ
காலத்தின் கொடையாய்க் கனலுங் கரும்புலி
காலந் தோறும் புதிதாய்ப் பிறக்கும்
மக்களைக் கொன்றுஅல் லவைசெய் தோரை
ஒக்க முடிக்க உருத்தே எழுந்தவர்
பூதத் தியற்கையும் தோற்றமும் மாற்றமும்
நிலையும் நிலையா மையும் முடிவில்
வெறுமை சுட்டிய வீடும் உலகில்
நெறியி னுணர்ந்த துறவோர் போலும்
இவரே.
தமிழ்மான வித்தில் தனிமறந் தழைத்தவர்
புகழ்நாற ஈகை பூத்தவர் அறங்காய்த்து
மானிடம் பழுத்த மன்னவர்
வானிடை மீனென வாழ்கவென் றும்மே!

பண்டிதர் வீ. பரந்தாமன்.

eelamhouse.com

# வயிற்றில் தீ வளர்த்த

உன்னை எங்கிருந்து பாடத் தொடங்குவது?
எந்தப் புள்ளியில் இருந்து வரையத் தொடங்குவது?
விண்ணளந்து நிற்கும் விஸ்வரூபத்தை
எந்தக் கண்கொண்டு காண்பது?
இருண்ட வாசலில் ஒளியிறக்கிய பறவையே,
உன் சிறகெரித்த நெருப்புக்குக் கேட்குமா
எம் தெருக்களின் துயர்ப்பாடல்?

பூரியும் குப்தாவும் வந்திறங்கிய போதே
ஆரியத்தை அடையாளம் கண்டவன் நீ.
சேந்தான்குளத்தில் அவர்களுக்கு காத்திருந்த போதே
கூந்தல் விரித்த பாஞ்சாலி எனக் கூறினாய்.
தீக்குளிக்கப் போகின்றது எம் தேசமென்று
அரிசிப் பொதியோடு அவர்கள் வந்தபோது
பெரிய ஞானியைப் போல் வாக்குரைத்தாய்,





**தியாகி**
**லெப் கேணல் திலீபனின்**
**14ஆம் ஆண்டு நினைவாக...**

பதின்னான்கு வருடங்களும் இறகுமுளைத்து
பறந்து போயினவா?
அட: காலத்துக்கேன் இத்தனை கடுகதி வேகம்?
சென்ற இடமெல்லாம் தீமூட்டி எரித்து விட்டு,
அந்த இராமன் கூட அயோத்தி திரும்பினான்.
திலீபனே நீயேன் திரும்பிவரவில்லை.
வழிநிறைய எம்முற்றம் பூத்த வீரியக் கொடியை
அழியாமுதலென்றல்லவா அழகு பார்த்தோம்!
அதை வேரோடிழுத்து வெய்யிலில் போட்டது
இமயம் உயரமெனும் அகம்பாவம்.
துயர முட்செடிகள் படர்ந்திருந்த காலையில்
உழவாரத் திருப்பணிக்கு ஆளணி திரட்டிய
நாவுக்கரசன் நீ.

இது பட்டினிக்குப் போடும் படியரிசியல்ல,
எம்மை சுட்டெரிக்கப்போடும் சுடுகாட்டு அரிசியென்று.
மாதமொன்று போக முன்னரே
அந்த மாரீச மான்களின் வேசம் கலைந்தது.
வேஷம் கலைந்து அவர்களின் வேட்டைப்பல் தெரிந்ததும்
நீ கோட்டை முன் நின்று குரல் வைத்தாய்.
கோபத் தீ விளங்கக் குருசேத்திரம் புறப்பட்டாய்.
பெருமிதத்தில் பூத்திருந்தாய் அப்போது.
'நீ முன்னே செல்
நான் பின்னே வருகின்றேன்' என
வாய்ச்சொல் அருளியது எங்கள் வரலாறு.
புல்லரித்துப் போனதெம் பூமி
அன்று விடிந்த போதே
எங்களின் ஆனந்தம் இருண்டு போனது.


eelamhouse.com

# வலியன்

வைகறையெழுந்து குளித்தாய்,
குறிப்பெழுதினாய்.
பூவுக்குப் புத்தாடை புனைவது போல
சாவுக்குத் தானா சட்டையிட்டாய்?
'கந்தன் கருணை' யிலிருந்துன் கால்நடந்த போது
கோயில் வீதியே குளிர்ந்து போனது.
கூட்டிவந்து கொலுவிருத்தினோம்.


அசோகச் சக்கரத்தின் கீழ்
நீ மூச்சிழந்து கிடந்ததை
இந்தப் பாவவிழிகள் தானே பார்த்தன.
ஊர்க்குளத்து நீரை முகில் தூக்கிப் போனது.
மீண்டும் மழையாகிப் பொழியுமென
வானம் பார்த்துக் கிடக்கிறது தேசம்.
நீ போன பின் உன் கனவுகளுக்கு கைகால் முளைத்தன.
திரண்டு வந்தெம் ஊர்புகுந்த குரங்குகளை
இரண்டு வருடத்துள் எறிந்தே கலைத்தோம்.
மணலாற்றில் எம் தலைவன் மறைந்திருக்கவில்லை.



சாட்சியாக எல்லாவற்றையும் பார்த்தபடி
வீற்றிருந்தாள் முத்துமாரி.
பன்னிரண்டு நாட்களாக உள்ளொடுங்கி
நீ உருகியபோது
வெள்ளை மணல் வீதி விம்மியது.
உன்னெதிரே நின்று எச்சில் விழுங்கியபோது
குற்றவுணர்வு எம்மைக் குதறியது.
வரண்டவுடன் நாவு அண்ணத்தில் ஒட்டியபோது
திரண்டிருந்த சுற்றம் தேம்பியது.
நீ படுத்தாய்,
எழுந்தாய்,
பக்கத்தில் இருந்தோரை மெல்லப் பார்த்தாய்.
மறப்போமா அந்த நாட்களை?
ஆவென வந்துன்னைச் சாவு விழுங்கிய போது
பாவியராகிப் பக்கத்திலிருந்தோம்.

வெட்டவெளியில் வீச்சரிவாளுடன் நின்று
'செக்மேற்றை' சிதறடித்தார்.
கீழே பார்!
உன் 'மக்கள் புரட்சிக் கனவு' மலர்ந்துள்ளது.
வானத்திலிருந்து பார்ப்பேன் என்றாயே,
நிச்சயம் பார்ப்பாய்,
தமிழீழம் மலரும் நாளை
தலைவன் கொடியேற்றும் அழகை.

**- கவிஞர் புதுவை இரத்தினதுரை**



eelamhouse.com

# அனைவரும் வணங்கும் உயிராகும்

மாவீரர் நாளில் வருகிறார் - மக்கள்
மாபெரும் ஒளியில் அழுகிறார்
அனைவரும் உறுதி எடுக்கிறார் - அங்கு
அள்ளி அள்ளிப் பொருளைக் கொடுக்கிறார்.

இரவும் பகலும் இனி உழைப்போம்
எமக்கொரு தாயகம் வரவழைப்போம்
ஒருவேளை உணவை நிறுத்திடுவோம் - இனி
உதவிடத் தமிழர்கள் துடித்திடுவோம்

மாவீரர் ஆனது எதற்காக? - தமிழ்
மண்மீட்க உயிர்க்கொடை அதற்காக!
ஆயிரம் காலத்துப் பயிராகும் - நாம்
அனைவரும் வணங்கும் உயிராகும்

செம்மணிப் புதைகுழி தோண்டிவிட்டான்
சிறையிலும் கண்களை நோண்டிவிட்டான்
குண்டுகள் போட்டும் கொன்றுவிட்டான் - கொடும்
கொலைவெறிச் சிங்களன் நன்றிகெட்டான்

முகாமில் இருந்த தமிழர்களை - சிங்கள
மொறப்பல்லிக் காடையன் சாகடித்தான் - இனி
கரும்புலி மறவர் புறப்படுவார் - (அ) ரத்தக்
காட்டேரி உயிரை எடுத்திடுவார்

முகமும் முகவரியும் அவன்தான் - நம்
முகமும் முகவரியும் அவன்தான் - உலகம்
முழுதும் பிரபாகரன் மயந்தான்

பார்த்தவர் வியக்கும்
கூர்ந்த விழிகள்
பைந்தமிழ் மணக்கும்
அவர்வாய் மொழிகள்
நேர்த்தியில் மயக்கும்
யாழ் நிலம் நெற்றி
நித்தம் கயவரை
எரிக்குமே பற்றி.

- **'பாசறைப்பாணர்' தேனிசை செல்லப்பா**





eelamhouse.com



# மாவீரர்நாள்

## பண்பாட்டு வாழ்வின் புதிய ஊற்றுக்கண்!

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்.

மாவீரர்நாள் தமிழீழ மக்களின் சமகால பண்பாட்டு வாழ்வில் ஆழமானதாக வேரூன்றிவிட்ட உன்னதமான உயிர்ப்பனுபவமாகும்.

தமிழீழ மக்களின் அரசியல் வாழ்வில் மாவீரர்நாளின் கனபரிமாணமானது பார்வைப் புலத்திற்குள் புலப்படும்வகையில் வீரியம் பெற்றுவந்தது. தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ஆரம்பமாகி, படிப்படியாக இதன் அரசியல் முக்கியத்துவம் முதன்மைபெற ஆரம்பித்தது. தமிழீழத் தேசியத் தலைவர் தனது கொள்கைவிளக்க உரையை மாவீரர்நாளில் மேற்கொண்டபோது அந்தநாளின் அரசியல் முக்கியத்துவம் முதன்மையாகிவிட்டது. இராணுவ பரிணாமத்தில் மாவீரர்நாளையொட்டிய இராணுவ நடவடிக்கைகள் என்கின்ற கருதுகோள்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மேலும், அவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்கின்ற குலைநடுங்கும் அச்சம் எதிரிகளுக்குள் கசப்புடன் உயிர்வாழ்கின்றது.

ஆனால், பண்பாட்டுத் தளத்தில் இதன் முகிழ்வு புலன்களுடன் இயைந்ததாய் ஆனால் புலன்களை வசப்படுத்தும் வலுவுடன் இடம்பெற்றுவருகின்றது. இந்தத் தளத்தில் இடம்பெறும் உன்னதமான மாற்றங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது பிரமாண்டமானதாய் தெரிகின்றது. பழமையான பண்பாட்டு ஐதீகங்களுடன் வாழ்ந்து வந்த தமிழீழ மக்கள் சமூகத்திற்கு இது புரட்சிகரமானதாய் இருந்தபோதும் மனத்தளத்தில் அதிர்ச்சி தராதவகையில் நிலைகொண்டுவிட்டது. மாவீரர்நாளை மையப் புள்ளியாகக் கொண்ட கலை பண்பாட்டு இயக்கம் வீறுகொண்டு எழுந்துள்ளது. வீரத்தையும் - ஈகத்தையும் தன் தொன்மையான வழிபாடுகளில் மட்டும் அறிந்திருந்த தமிழீழ சமூகத்திற்கு மீளப்பிறப்பெடுத்த புதிய தொழுமுறைகள் புதிய அடித்தளங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

தாயகத்தில், முளைவிடும் புதிய தேசத்தின் ஆன்மாவில் (மண்ணில்) வாழும் மக்கள் மாவீரர்களை விளக்கேற்றி வழிபட்டு - அவர்கள் நினைவுகளில் மூழ்கும் பன்முகப்பட்ட பண்பாட்டு அமைவுகளை நிகழ்த்துகின்றனர். மறுபுறம், புகலிட வாழ்வில் மாவீரர்நாள் நிகழ்வுகள் அந்த தமிழீழ ஆன்மாவை தொட்டுப் பார்க்கும் உணர்வுபூர்வமான நிகழ்வுகளாகிவிட்டன.

புகலிடங்களில் மாவீரர்நாளையொட்டிய கலை - பண்பாட்டு இயக்கம் காலத்துடன் போட்டியிட்டு வளர்ச்சி கண்டுவிட்டது. புகலிட வாழ்வில் மொழி மற்றும் பண்பாட்டு தளங்கள் புதிதான - உச்ச சந்தைமுறை நுகர்வுக்கலாச்சாரத்தினால் உலுப்பப்படுகையில் தமிழீழ மக்கள் மத்தியில் மாவீரர் நாள் செயற்பாடுகள் மாற்றுவிசையை பிறப்பிக்கின்றது. மாவீரர் நினைவுக்கான தன்னாற்றல் போட்டிகள், புதிது - புதிதான படைப்புக்கள் என தமிழீழத் தமிழர் வாழ்வு களைகட்டுகின்றது. மாவீரர் நாளையொட்டிய நிகழ்வுகள் புகலிட நாடுகளின் பிரமாண்டமான நிகழ்வுகளாகவும், பிரமாதமான நிகழ்வுகளாகவும் இடம்பெறுகின்றது. இந்தப் பண்பாட்டு முகிழ்வில் நம்பிக்கைகளும், தேடல்களும் முக்கியமான அனுபவமாக அமையினும் சமகால வாழ்வின் பன்முகத் தன்மைகள் நுணுக்கமாக அணுகப்படுகின்றன. இந்தப் புதிய பண்பாட்டியக்கம் நம்பிக்கை தருகின்றது!





eelamhouse.com

# இதையும் பரணியாய்ப் பாடுங்களேன்

**-துளசிச்செல்வன்**

'ரெண்டு வித்துடலையும் என்னெண்டு ஒரே நேரத்தில் வீட்டை கொண்டு போறது. அதுவும் எல்லைக்குப் போன பிள்ளையள் வரும் என்று காத்துக் கிடக்கும் ஏழைத் தாய் தந்தை முன்னுக்கு எப்படி இதைச் சொல்லுறது'

கண்ணனும் காளிதாசனும் மூடுப்பட்ட பதுங்குகுழியை கிளறுவதற்கு முதல் இந்தக் கேள்விதான். விடயமறிந்த ஒவ்வொரு நெஞ்சுகளிலும் சுமையாய் கனத்துக்கொண்டிருந்தது.

கண்ணன், காளிதாஸ் சகோதரர்களாகப் பிறந்து உயிர் நண்பர்களைப்போல் மிக அன்பாய் பழகுபவர்கள். இருவருக்குமிடையே எவ்வளவு நெருக்கமான உறவு! அண்ணா தம்பி ஒருகணம்கூட பிரிந்திருக்கமாட்டார்கள். அதுதானே இருவரும் ஒன்றாகவே களம்வரைக்கும் வந்துவிட்டார்கள். சாவிலும் அப்படிச் சேர்ந்தே இருக்கவேண்டுமா? அவர்களின் விருப்பத்திற்குச் சரி அவர்களையே நம்பியிருக்கும் அம்மா... அப்பா...

இப்ப கணத்துக்கு முன்னரும் கிபிர் வாற இரைச்சல் கேட்கவே வெளியில் நின்ற அண்ணனையும் அக்கறையோடு இழுத்துக்கொண்டுதானே பதுங்குகுழிக்குள் இருவருமாகப் போனார்கள். இருவரும் ஒன்றாகவே மூடப்பட்டது, வேதனையாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகவிருந்தது.

குண்டுவீச்சினால் ஏற்பட்ட எந்த சூழல் மாற்றமும் இயல்புக்கு வரவே இல்லை. வெடியதிர்வு ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து யாருமே மீளவில்லை. எரியக்கூடிய பொருட்களில் தீப்பிடிக்க அவை எரிந்து கொண்டிருந்தன. புழுதியும் வெடிமருந்து மணமும் நிலைமையை இன்னும் மோசமாக்குவனவாகவே மாற்றி இருந்தன.

இது நிகழ்ந்தது முன்னரங்கப் பகுதியிலிருந்து சில மீற்றர் தூரத்திற்குள்தான். காவலரணில் ஓயாமல் நின்று காவல் காத்துவிட்டு இங்கேயும் சில வேலைகள் செய்ய வந்தபோதுதான் இந்த விபரீதம்.

கால்களில் மிகைஒலியின் வேகத்தோடு மீட்புப் பணியில் எல்லோரும் துரிதமானார்கள். 'டேய் உதுக்குள்ளதான் கண்ணனும் காளிதாசனும்' சொல்லுகின்றபோதே உயிரின் அடிஈரம்கூட ஒரு முறை உலர்ந்துபோனது.

ஊரிலிருந்து எல்லைகாக்க ஆர்வமாக வந்து ஒவவொரு முறையும் போகின்றபோதும், நின்ற இடம் நகராமல் ஒரே காவலரணில் அதே பதுங்குகுழியில் இரவுபகல் என காவல் நிற்கும் போராளிச் சகோதர சகோதரிகளையும், கைகள் புண்ணாகியும் ஓய்வு எடுக்காது பதுங்குகுழி அமைத்து, காவல் காத்து சோராது நின்று களமாடி அவர்களின் முன்னாலேயே மடிந்துபோன சொந்தங்களையும் நேரில் கண்டபோது அவர்களுக்குள்ளே ஒரு உறுதியும் ஓர்மமும் உருவாகியிருந்தது. 'இந்தமுறை ரேண் முடிஞ்சாலும் ஊருக்குப் போறேல்ல, களத்திலதான் நிற்கிறது' என்ற முடிவோடு தன் பொறுப்பாளருக்குத் தெரியப் படுத்திவிட்டு களத்திலேயே நின்றான் கண்ணன். எப்போதும் எந்த விடயத்திலும் பிரியாத அண்ணன் காளிதாசும் அவன்கூடவே களத்தில் நின்றுவிட்டான்.

கண்ணனுக்கும், காளிதாசுக்கும் உருவ வேறுபாடு இருக்கிறது. உணர்வில் துளிவேறுபாடும் இல்லை. ஒருவரை ஒருவர் விஞ்ச நினைப்பது பாசம் வைப்பதில் மட்டும்தான்.

அவர்கள் களத்திற்கு வந்தால் என்ன கட்டளை கிடைக்கின்றதோ அதை நிறைவேற்றுவதில்தான் கருத்தாயிருப்பார்கள். எல்லைப்பணி முடிந்து போகும்போது பாராட்டுப்பெற்று, நாங்கள் இந்த மண்ணுக்கு பணிசெய்தோம் என்ற திருப்தியோடு போவார்கள். களமுனை என்பதன் கடின வாழ்க்கையும், லேசான பயத்தையும் பழகப் பழக சரியாக்கிக் கொண்டார்கள். இப்போது இருவருமே களத்தின் கதாநாயகர்கள்.

களத்தின் நிலைமைக்கு ஏற்ப பணி செய்கின்றபோது திசைக்கொன்றாய் இருவருமே பிரிய வேண்டியிருக்கும். உறவைக் காரணம்காட்டி தாமதிக்க அவர்கள் களவாழ்க்கையின் சூழ்நிலை அறியாதவர்கள் அல்ல. ஆனாலும், பிரிந்திருக்க அவர்கள் இருவராலும் முடிவதில்லை. அங்கே கிடைக்கின்ற



eelamhouse.com

சிறு ஓய்வுவேளையில்கூட தொலைத்தொடர்புக் கருவியில் அண்ணனும் தம்பியும் ஓரிரு வார்த்தைதானும் கதைத்துவிடுவார்கள். இருவரும் மாறிமாறி நலம் விசாரிப்பு. பின் ஒருவருக்கொருவர் கவனமாக இருக்கவேண்டும் என்ற புத்திமதி இப்படியே இரண்டு இரத்த உறவுகளின் சிறகும் களத்திலேயும் விரிந்துபறந்தது.

கண்ணன் அமைதியான, மென்மையான சுபாவம் கொண்டவன். வட்ட முகம், எளிமையான தோற்றம் யாருடனும் எளிதில் பழகமாட்டான். பாசம் வைத்தாலோ பிரியவும் மாட்டான். ஒவ்வொருமுறையும் அவன் களத்திற்கு வந்து அந்தப் போராளிகளுடன் பழகி அவர்களின் உணர்வறிந்து பிரிவது அவனுக்கு கஸ்டமானதொன்றாகவேயிருந்தது. களவாழ்க்கையின் அவசியத்தை, அங்கே எல்லை காத்துநிற்கும் ஒவ்வொரு போராளியின் நெஞ்சாழத்தை அறிந்தவர்கள் அதைப்பற்றிச் சிந்திப்பவர்கள், எப்படி இந்த மண்ணுக்கு பணி செய்யாது இருக்கமுடியும்? அதனால்தான் கண்ணன் தன்னை போராளியாக்கிவிட வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருப்பானாம். அண்ணன் காளிதாஸ் சற்று வேறுபாடு உள்ளவன். கண்ணனிலும் சற்று எடுப்பான தோற்றம். எல்லோருடனும் கதைத்து கலகலக்கும் சுபாவம்.

இரண்டுபேரையும் எப்படி ஒரே நேரத்தில் இழந்துபோவதை அந்த ஏழைத் தாய் தந்தை தாங்குவார்கள். நடந்தால் நதியாக... கிடந்தால் மலையாக... அந்தக்குடும்பத்தின் அரண்களே இவர்கள்தானே!

குண்டு வீச்சிலே கோலம் கலைந்து போய்க்கிடந்த பதுங்குகுழியின் மண்ணை விலக்கியபோது கண்ணனும் காளிதாசும் சிரித்தபடியே வெளியே வந்தனர். மண்ணும் புழுதியும் அவர்களில் படிந்து அவர்களையே உருமாற்றியிருந்தது. அண்ணன் தம்பியில் இருந்த மண்ணையும், தப்பி அண்ணனில் இருந்த மண்ணையும் தட்டிக்கொண்டிருக்க ஆச்சரியமும், ஆனந்தமும் அங்கு எல்லோரிடையேயும் பரவியது. அவர்களின் உடலில் ஏற்பட்டிருந்த குண்டுச் சிதறல்களின் சிறு காயங்களிலிருந்தும், சிராய்ப்புக் காயங்களிருந்தும் இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

'நல்லவேளை கொஞ்சமென்றால் இரண்டுபேரும் ஒன்றாய்த்தான் போயிருக்க வேண்டியிருக்கும்'

காளிதாஸ் அங்கு நிலவிய மௌனத்தில் சொல்லெறிந்து கலைத்தான். ஒவ்வொருவரும் அந்தக் கணத்துக்குள் தாம் நினைத்ததைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். எல்லோரையும் அச்சத்திலும் பின் ஆனந்தத்தின் உச்சத்திலும் ஏற்றிய அண்ணனும் தம்பியும் சிரிப்பாலேயே எல்லோருக்கும் பதிலுரைத்தார்கள். இருவரது கைகளும் இறுக்கமாகவே பின்னப்பட்டதுபோல பிரியாமலே இருந்தன.

களம் கணத்துக்குக் கணம் புதிய சூழல்களைப் பிரசவிக்கின்ற ஓரிடம். மாறிக்கொண்டிருக்கும் கணங்களுக்குள் சிக்குப்பட்டுக்கொள்வது மரங்களும், கட்டடங்களும், நிலமும் மட்டுமல்ல....

அன்று அதிகாலை அவர்களுக்கு மட்டும் வரவில்லை. இரவே தெரியாதபோது, எப்படி அதிகாலையை அவர்களால் அறிய முடிந்திருக்கும். இராணுவ நடமாட்டங்களின் அசுமாத்தங்கள் அதிகரித்தமையினால் இமையோடு இமைசேராது விழித்திருந்தபோது அந்த இமைகளுக்கிடையே ஊசலாடுவது தாயகக் கனவும், உறவுகளின் கலப்பும்தான்.

கண்ணனுக்கு எப்படி இருந்திருக்குமோ என்னவோ? அண்ணன் முன்னணியில், இவன் இடையில் ... மோட்டாருடன், இருவரும் ஒருவரோடொருவர் தொலைத்தொடர்பில் கதைத்து சில மணித்துளிகள்தான் கால இடைவெளியிருக்கும். போர்க்களத்தில் ஒவ்வொரு கணமும் இரத்தத்துளி போன்றதுதானே.

காலை விடியப்போகிறதுதானே நன்கு விடிந்ததும் அண்ணை மறுபடியும்....



eelamhouse.com

தொடர்பெடுப்பான், இதுதானே அவர்களது வழமையான செயற்பாடு. ஆனால், அன்று அவர்கள் ஒருவரோடொருவர் கதைத்தபோது இயல்பாக நலம் விசாரித்துக் கதைக்கக்கூடியவாறு நிலைமை இருக்கவில்லை. யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. கடுமையான எறிகணை விதைப்புக்கள். அங்குலத்திற்கு அங்குலம் வீழ்ந்துவெடிக்கும் குண்டுகள். பூமியின் அச்சாணியை அதிரவைக்கின்ற கவசவாகனங்களின் இரைச்சல்கள் எல்லாம், அந்த விடிகாலைக்கு புதியதொரு அடையாளமாயிருந்தது.

குண்டுகள் வெடித்துச் சிதறும் பிரகாசத்தில் சிதைந்துபோன தென்னை, பனை மரங்களின் முகங்கள் தெரிந்தன. சண்டையின் ஆரம்பத்திலேயே எல்லாம் நடந்து முடிந்தாற்போல முன்னணிக் காவலரண் தாண்டி எல்லாப் பக்கமும் வேட்டோசைகளாகவே இருந்தன. சந்தித்த பெரிய சமர்களைவிட இது மிகவும் வித்தியாசமான சமராயிருந்தது. ஆட்டங்கண்டுவிட்ட ஆட்சிக் கதிரையை தக்கவைத்துக்கொள்வதற்கும் சிங்கள மக்களையும், உலக நாடுகளையும் ஏமாற்றவும் போட்ட நாடகம் அந்த இடத்தில் அரங்கேறியது. முடிவுதான் பரிதாபகரமாக... அரசிடம் முதலிருந்த முகமூடியையும் பறித்துப்போனது.

நெருப்பிலே நீராடும் கூட்டத்திற்கு சுவாலை என்ன சுடவா போகிறது! எங்கும் பரவியிருந்த எதிரிகளும் ஒரு இடமும் மிச்சமில்லாது வந்து விழும் குண்டுகளாலும் அந்தக்களம் உருமாறிப் போயிருந்தது. எல்லா இடமும் புகையும் எரிவுகளும், ஓயாமல் மிக், கிபிர் விமானங்களின் இரைச்சல்களும்தான் இந்த இரைச்சல்களுக்கிடையே பல தொலைத்தொடர்பு உரையாடல்களும் நிகழ்ந்துகொண்டுதான் இருந்தன. அதற்குள் இந்த உரையாடல்களும் சில காதுகளில் விழுந்தது.

'காளி அண்ணா நிலமை எப்படியிருக்கு ஓவர்'

'பறவாயில்லை சமாளிக்கக்கூடிய மாதிரித்தான் கிடக்கு. நீ எப்படி இருக்கிறாய் தம்பி'

'சிக்கலில்லை உனக்கு ஏதும் உதவி தேவையெண்டால் கேள், உடன செல்போட்டுத்தாறன் ஓவர்'

'சரி தேவையெண்டால் எடுக்கிறன்'

அவர்கள் இருவருக்கிடையே மட்டும் மௌனம். சண்டைச் சத்தங்கள் ஓய்வில்லாது பூமியை உலுக்கிக்கொண்டிருந்தன.

'கண்ணா கவனம்... கவனமாயிருந்து வாறவனை பார்த்துப் பார்த்துச் சுடு'

வசனம் முடிக்காமலேயே நீண்ட இடைவெளி. அப்படியே தொடர்பு துண்டிக்கப்பட்டது. களத்தில் அண்ணனுக்கு ஏதோ பிரச்சினைபோல.

ஓ... அங்கே நிற்கும் ஒவ்வொரு வீரர்களுக்கும் இருப்பது போல காளிதாசைச் சுற்றியும் பிரச்சினைதான். கிளாலிப் பக்கத்தால் முன்னரங்க நிலைகளை ஊடறுத்து உள்நுழைந்து, இரண்டாவது கட்டமாக அமைக்கப்பட்ட நிலைகளைக் கைப்பற்ற கடும் பலத்தினைப் பிரயோகித்து, ஒவ்வொரு போராளிகளினதும் எல்லைப்படை வீரர்களினதும் உயிரையும் அர்ப்பணித்த உச்ச எதிர்ப்பினையும் தாண்டி ஒவ்வொரு காவலரணாக இராணுவத்தினர் கைப்பற்றியபோதிலும், காளிதாசின் காவலரணை நெருங்கக்கூட முடியவில்லை. அவனும் இன்னும் இரண்டு எல்லைப் படை வீரர்களும் அவர்களோடு பெண் போராளிகள் மூவரும்தான். அதில் ஒருத்தி (மதி) பதுங்கிச்சுடும் துப்பாக்கியோடு நெருப்பினைப் போலவே எங்கும் சுற்றிச்சூழும் இராணுவத்தை அந்தக் காவலரனோடு மறித்தார்கள். அதிலே கடும் சண்டை நடந்துகொண்டிருந்தது. ஒரு இடமும் மிச்சமில்லாது, வீழ்ந்து வெடித்த எறிகணைகள் கட்டளை மையத்திற்கும் காளிதாசுக்குமான தொடர்பை சிறுபொழுது துண்டித்திருந்தது. ஆனால், அவனின் காவலரண்களுக்கு சற்று பின்தள்ளி கடற்கரைப்பக்கமாக இறங்குதுறைக்கு அருகாக மோட்டார் நிலையத்திற்குப் பொறுப்பாக நிற்கும் தம்பியினது தொடர்பு இருந்தது. கண்ணன் குறுகிய காலத்திற்கு மோட்டார் பயிற்சி பெற்றிருந்தாலும், சிறப்பாகச் சுடக்கூடியவன் என்று பலரும் கதைப்பதை காளிதாசும் கேள்விப்பட்டிருக்கிறான்.

மோட்டாரினால் ஆதரவுச் சூடுகளைப்பெற காளி கண்ணனை தொடர்புகொண்டான். தொலைத்தொடர்புக் கருவியில் மீண்டும் இருவருக்குமிடையில் இணைப்பு.

'அண்ணா கவனம் எதுக்கு அடிக்க வேணுமெண்டு சொல்லு...'

அண்ணன் அதற்கான பரிபாசை இலக்கங்களைக்கூற தம்பியின் மோட்டார் இயங்கியது. மிக வேகமாக அடுத்தடுத்து எறிகணைகளை அனுப்பினான். இலக்குத்தவறாத சூடுகள். அதுவே அப்போது தேவையானதுமாக இருந்தது. தம்பியின் சூட்டாதரவுகள் அண்ணனின் முறியடிப்பிற்கு பெரிதும் துணைநின்றன.

கண்ணனின் ஒவ்வொரு எறிகணைகளும் எதிரிக்கு பெரிதும் சிரமத்தை ஏற்படுத்துவதுபோல எதிரியின் அத்தனை எறிகணை வீச்சுகளும் கண்ணனிற்கும் கடும் சிக்கலானதொன்றாகவே இருந்தது.

'கண்ணா காணும் நிப்பாட்டு, கனக்க அடிக்காதே சப்ளை வருகுதோ தெரியாது'

'உனக்கு தேவையெண்டால் கேள் உடனே ஒழுங்கு செய்யலாம் அண்ணா நீ கவனம்'

'ஓ தேவையெண்டால் கேட்கிறன். நீயும் கவனமா நிண்டு சண்டையைப்பிடி'

சாதாரண வாழ்க்கையில் சேர்ந்து வருகிற



eelamhouse.com

உறவுகளைவிட ஒரே களத்தில் மிக ஆபத்தான சூழலுக்குள் நின்று, எப்போதும் அந்த உறவின் உயிர் பறிக்கப்படலாம் என்ற நிலையில் துடிக்கிறதே இந்த உறவுகள் இரண்டும். இது மிகவும் வித்தியாசமானதும், வைரமானதுமான உறவு.

'அண்ணை என்னில இருந்து 50 மீற்றருக்குள்ள ஆமி வந்திட்டான். முன்னுக்கு வந்தவனை விழுத்திப்போட்டன்'

'என்னில இருந்து 50 மீற்றருக்குள்ள செல் அடியுங்கோ'

கண்ணனின் குரல் பதட்டமின்றி தொலைத்தொடர்புச் சாதனத்தில் தெளிவாகவே ஒலித்தது. அவன் கட்டளை மையத்தோடு கதைத்தவை காளியின் தொலைத்தொடர்புக்கருவியிலும் ஒலித்தது.

'அண்ணை விரைவுபடுத்துங்கோ நான் வாறவங்களைச் சுட்டுக்கொண்டிருக்கிறன்'

அவன் நிற்கும் இடத்திலிருந்து 50 மீற்றருக்குள் செல்லடிப்பது என்பது மிக கிட்டிய தூரம். அது அவனுக்கும் தெரியும். அதில் தன்னைவிட மண்ணை அவன் அதிகமாக நினைத்திருக்கவேண்டும். அதுதான் தனக்கான எந்த ஆபத்தையும் நினையாது வரும் எதிரியை அழியுங்கள் என்று அறிவித்திருக்கிறான்.

கண்ணன் சொல்லும் தகவலின்படி கடற்கரைப் பக்கமாக நகர்ந்த இராணுவத்தினர் மீது கடுமையாக எமது ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்துவெடித்தன. அந்த எறிகணைகள் ஒவ்வொன்றும் தீச்சுவாலைக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டிருந்தது.

எல்லா இடமுமே வெடிமுழக்கங்கள் என்பதால் எந்தச் சத்தத்தையும் பிரித்து அறிய முடியவில்லை. எந்தச் சத்தமோடு கண்ணனின் உயிர்மூச்சு அடங்கியதோ....

சண்டை தொடர்ந்துகொண்டே இருந்தது. களம் ஓய்வதாக இல்லை. அதைப்போலவே மனங்களும்.

'கண்ணன்.. கண்ணன்.. கண்ணா... கண்ணா ஓவர்'

'கண்ணா... கண்ணா.. காளி ஓவர்'

அண்ணன் தம்பியை அழைப்பது எல்லோருக்கும் கேட்கிறது. உயிரின் ஆழத்திலிருந்து வரும் அந்த அழைப்புக்கு யார் பதில் சொல்லுவது. அழைப்பு நீண்டபடியே இருந்தது.

கட்டளைத் தளபதி நிலைமையை உணர்ந்துகொண்டார். சொல்லமுடியாத சோகத்தோடு தேடி எடுத்த சில சொற்களை மட்டும் அவன் நம்பும்படி சொல்லவேண்டியிருந்த களச்சூழலது. அவன் உருகிவிடுவானே என்ற நினைப்பும் அவன் எப்படி தாங்கப்போகிறான் என்ற ஏக்கமே ஒவ்வொருவருக்குள்ளேயும்.

'காளி கண்ணனுக்கு சின்னக்காயம் பின்னுக்கு அனுப்பியாச்சு' அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றின் இடைவெளியும் உச்சரித்த தொனியும் அதிலே கலந்துள்ள சோகத்தை உணர்த்தியது. 'டேய் காளி உன்ர கண்ணா வீரச்சாவு' என்று யாரோ சொல்லுவதாகவே காளி உணர்ந்தான். தம்பியைப் பார்க்க வேணும்போல உயிரின் எல்லா இடமும் துடித்தது. இதே களத்திலேயே எத்தனை தம்பிகள் தங்கைகள் வீரச்சாவடைந்ததை காளி பார்த்திருக்கிறான். இப்பவும் அவன் அருகெல்லாம்...

உறவின் பிரிவு அவனின் வேகத்திற்கு இன்னும் உரம் சேர்த்தது.



'அண்ணை செல்லடிச்சுத் தாங்கோ விடுபட்ட பொயின்ர பிடிச்சுத்தாறன்'

இது காளியின் குரல்தான் மிகவும் கம்பீரமாக ஒலித்தது. அவனது வேண்டுதலின்படி உதவி கிடைக்க அந்த இடம் மெல்ல மெல்ல எங்கள் கைகளில் வீழ்ந்தது. காவலரண்கள் மீட்கப்பட தீச்சுவாலை தானே அணைந்தது. போரின் இரைச்சல் மெல்ல தணிந்தது. போராளி என்ற நிலையோடு இருக்கவேண்டும் என்று ஆவல்கொண்ட கண்ணன், தன் சாவின் பின்தான் 'ஒரு புலி வீரன்' என்று கௌரவிக்கப்பட்டான். தம்பியை கணம்கூட பிரியாதிருந்த அண்ணன் அப்போது தம்பியைப்போல, அவன் நினைவுகளுடன் இன்னும் களத்திலே எல்லை காத்தபடி காக்கிறான் இந்தத் தேசத்தை.


eelamhouse.com



ரொறன்டோ- கனடா



நியூயோர்க்- அமெரிக்கா



பேர்ண்- சுவிற்சர்லாந்து



லண்டன்- இங்கிலாந்து



உத்ரெக்- நெதர்லாந்து



ஒஸ்லோ- நோர்வே

அல்பி- சுவிடன்



பலர்மோ- இத்தாலி



பாரிஸ்- பிரான்ஸ்




eelamhouse.com

# உலகெங்கும் தமிழீழ மாவீரர்நாள் நிகழ்வுகள் 2000



கேர்ணிங்- டென்மார்க்

மெல்பேண்- அவுஸ்திரேலியா





சவுதி- மத்திய கிழக்கு

டோட்முண்ட்- ஜேர்மனி





ருஸ்சியா







eelamhouse.com

# கேணல் சங்கர்



## காற்றிலேறும் கனவிலிருந்தவனை தோற்றுப்போவோம்



கவிஞர்
புதுவை இரத்தினதுரை

பேரிடி இப்படியும் இறங்குமா?
இந்தப் புழுதித் தெருவின் புலுண்டல் பற்றைக்குள்ளுமா
எமன் ஒழிந்திருக்கக்கூடும்?
ஆற்றல்களை அள்ளிச் செல்வதில் மட்டும்
கூற்றுவனுக்கேன் இத்தனை அவசரம்?
சரிந்தது சங்கர் என்ற சாமானியனல்ல,
விரிந்துயர்ந்த பெருமலை,
கேணல் சங்கர்
மேடையேறாத வெளிச்சம்
மிதப்பில் நடக்காத மேகம்
அதிகம் வெளியில் வராத உற்சவ மூர்த்தி,
'தம்பி' யைச் சுற்றிய வாழ்விலே
தன்னைத் தனக்குள்ளே கரைத்த சாணக்கியன்.
தலைவனருகில் இந்த 'மதியுரை மந்திரிக்கு'
சரியாசனமிருந்தது.
தோழர்களிடையே இந்த 'சொர்ணலிங்கத்திற்கு'
சிம்மாசனமிருந்தது.
'காற்றிலேறியே விண்ணையும் சாடும்' கனவில்



eelamhouse.com



கடிகார முட்களைக் கவனிக்கத் தவறியவன்.
இவன் வானமளந்த கடல்.
கடலளந்த வானம்.
காடளந்த வேங்கை.
இமய வரம்பின் இறுமாப்பில்
எம் தேசமெரிந்த நாட்களில்
தலைவனைத் தாங்கிய தோள்களிலொன்றாய்
இவன் 'வனம் காத்த வீச்சரிவாள் வீரன்'
காட்டின் மரங்களின் பேச்சையும்,
திசையின் வழிகளில் காற்றையும்,
காற்றின் வழிகளில் திசைகளையும்
சரியாக இனங்காணும் சாதுரியன்.
இவன் மணலாறுக்கே வரலாறு எழுதிய அனலாறு.
கூட்டிலொன்றாகிய சோதரக் குஞ்சுகள்
விடுதலைக்காய் ஒவ்வொன்றாய் சிறகெரிந்து
வீழ்ந்தபோதும் தளராதிருந்த சத்தியவான்.
வாழ்வின் முடிச்சுக்களைக்கூட
இறுக்கமற்று எளிதாகவே போட்டான் அழகாக,
பூத்துப் பொலிந்திருந்தது வீட்டுத்தோட்டம்.
எவர் கண்பட்டுப் போனதோ?
இப்படியாய் எரிந்துபோச்சே.
பகையே!
மலை சரித்தோம் என்ற மமதை
உனக்கு நெடுநாள் நீளாது.
விலை கொடுப்பாய் விரைவில்,
விழிசிவந்து கோபத்திலிருக்கும்
'வெள்ளைத்தேவனை இழந்த வீரபாண்டி'
பதில் சொல்லவேண்டிவரும் பகையே
அதன் பிறகும் ஒரு கவிதை
சங்கருக்காக எழுதுவேன்.
அதுவே தகும்.

சூரியப் புதல்வர்கள்

eelamhouse.com



மின்னல் தெறிப்பாய் ஒரு நொடிப் பார்வையில்

இதயத்தின் ஈரமும்

இருட்போர்வை விலக்கும் உறுதியும்

விடுதலைச் சக்கரத்தைச் சுழற்றும் உரமும், உணர்வும்

உமிழும் விழிகளை இழந்தா போனோம்...?

இதயத்தில் நெருப்பு மூட்டிச் சென்ற

அந்தப் பனித்த இருளின் பறிப்பில்

எங்கள் சூரியக் குழந்தைகளை தொலைத்தா போனோம்...?


வீரியம் கொப்பளித்துப் பாயும்

விடுதலைப் பெருநதியின் ஒவ்வொரு துளியிலும்

அதன் ஒவ்வொரு அசைவிலும்

உமது முகம்.

eelamhouse.com



வங்கக் கடலுள்ளவரை
உம் வாழ்வையும் வீரச்சாவையும்
எம் மண் நினைவு கொள்ளும்

# நீங்காத நினைவு..



சூரியப் புதல்வர்கள்

eelamhouse.com





**1987** மே 26ஆம் திகதி "ஒப்ப ரேசன் லிபரேசன்" என்ற பெயரில் சிங்கள அரசாங்கம் யாழ்.குடாநாட்டின் ஒரு பகுதியான வடமராட்சி மீது பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. பெரும் மக்கள் படுகொலை 'இடப்பெயர்வு அவலம்' கைதுகள் என்பவற்றின் மத்தியிலும் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற முனைப்புடன் பாரிய படையெடுப்பை சிங்கள அரசாங்கம் நடத்தியிருந்தது.

1987 ஜுலை 5ஆம் திகதி நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த சிங் களப்படை முகாமை தனியொருவனாக வெடிமருந்தேற்றிய வாகனத்தில் சென்று முற்றாகத் தகர்த்து நூற்றுக் கணக்கான படையினரை அழித்து கரும்புலிகள் சகாப் தத்தின் முதலாவது போராளியாக கப்டன் மில்லர் தனது இன்னுயிரை ஈகம் செய்தார்.

கரும்புலி கப்டன் மில்லர் குறித்து அவரது தாயார் பின்வருமாறு கூறுகிறார்.

"என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் எண்டிறது என்ரை நம்பிக்கை தம்பி. அதனால நான் அவன்ரை போக்குகளைப் பற்றி பெரிசா யோசிக்கிறதில்லை", மில்லரின் அம்மா தன் பிள்ளையைப்பற்றி பெருமையோடு கூறிக்கொண்டிருந்தாள்.

"அவனொரு துடியாட்டமான பொடியன் ஒரு இடத்துல ஆறுதலா இருக்கிறதைக் காணேலாது. ஏதாவது ஒண்டு செய்து கொண்டுதானிருப்பான். மண்ணைக்கிண்டுவான், பற்றறியையும், வயரையும் வைச்சு முடிஞ்சு கொண்டிருப்பான். அல்லது அப்பாவின் கார் 'பொனட்டை' திறந்து போட்டு அதுக்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக்கொண்டிருப்பான்..."

அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

"மற்ற ஆட்களுக்கு உதவி செய்யிற பழக்கம் அவனிட்ட சின்னனில் இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடனே போய் செய்து கொடுப்பான்... முயற்சியும் இரக்கமும் அவன் பிறக்கும்போதே அவனோட கூடப் பிறந்ததுகள் தம்பி"

மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும்போது அருகிலிருந்து



eelamhouse.com

# கரும்புலி கப்டன் மில்லர்
# ஒரு சகாப்தத்தின் ஆரம்பம்

அவதானித்துக் கொண்டிருப்பவன், அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச் செய்து பார்க்கத்துவங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத் துவங்கியது. நாட் செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும் பின்னுக்கும் போய்வந்தது. ஒரு நாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தபோது கார் வீதியிலே ஏறி விக்கி விக்கி ஓடத்துவங்கிவிட்டது. அம்மாவை பயம் பற்றிக்கொள்ள வீதியிலே ஓடி வந்து நின்று பார்த்தாள்.

இப்படித்தான் இன்னும் ஒருநாள்,

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டிற்கு முன்னால் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த மில்லர் அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான்.

வீட்டிற்கு வந்தவன், மெதுவாக ஒழிந்து ஒழிந்து பின்னால் போய் கார் 'ராங்கிற்குள்' குழாயைச் செலுத்தி வாயால் இழுத்து பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, ஒரு அசல் அப்பாவியைப் போல அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றான். நடந்ததைக் கண்டபோதும் அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மாவுக்கும் அது பிழை மாதிரி தெரியவில்லை.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால், அவனது செய்கைகளைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை.

காலச்சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. இப்போது 1984இன் ஆரம்பம். எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது. எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறிய பொழுது அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது.



முன்புபோல், பழைய நண்பர்களுடன், மாந்தோப்பில் விளையாடுவது நின்று போனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான்.

ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடிவந்த தம்பி சொன்னான். "அம்மா... அம்மா அண்ணா சந்தியடியில நோட்டீசு குடுத்துக் கொண்டு நிக்கிறான்"

அம்மாவுக்கு உள்ளூரப் பயம்தான். ஆனாலும் அம்மா அவனைப் புரிந்து கொண்டாள்.

இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பி வரவில்லை.

"பயிற்சி முகாமில் நிற்கிறான்" என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளும் அழுதாள். இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை.

அந்தத் தாய் அந்த இறுதிநாளை நினைத்துப் பார்க்கிறாள்.

அது "ஒப்பரேசன் லிபரேசன்" காலம்.

"அந்த நேரம் இங்க எல்லா இடத்திலையும் ஆமி. அதனால் இரவில் நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்..."

"திடீரென வீடெல்லாம் அதிர பெரிய ஒரு குண்டுச் சத்தம் எங்களைத் திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்சநேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாகிட்டுது."

"பொடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு" என்று எங்களுக்கை கதைச்சுப் போட்டு நாங்கள் படுத்திட்டம்.

அடுத்தநாள் காலையில் நெல்லியடிப்பக்கம் இருந்து வந்த ஒருத்தர் 'ஊருக்குள்ள சொல்லி, அந்தக்கதை மெல்ல மெல்ல என்ர காதுக்க வந்தபோதுதான் தெரியும்...

முதல் நாள் வீட்டை உலுக்கி என்னை நித்திரையால் திடுக்கிடவைத்த அந்தக் குண்டுச் சத்தம்... என்ர பிள்ளையும்... அப்ப அழவும் ஏலாது எல்லாப் பக்கத்திலையும் ஆமி... அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமுறி அழுதேன்.

அயலாக்கள் பின்பக்கத்தால் வந்து எங்களுக்கு ஆறுதல் சொல்லுவினம்.

றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக்கொண்டு கேட்கும். மெதுவாக பின்பக்கத்தால கலைஞ்சு போயிடுவினம்... பிறகு வருவினம்...

ம்... ம் என்ர மகன் செத்திட்டான் எண்டுறது எனக்கு கவலைதான். ஆனால், அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன், அதை நினைக்க பெருமையாகத்தான் கிடக்கு"

கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 21 வயதேயான வசந்தன் எனும் இளைஞன் மில்லர் எனும் முதலாவது கரும்புலியாக நடத்திக் காட்டிய இந்தத் தியாக வேள்வித் தீ தொடர்ந்தும் கொழுந்து விட்டெரிந்து விடுதலைப் போராட்டம் முன்னேற குறுக்கே தடையாக இருக்கும் அனைத்தையும் பொசுக்கி வருகின்றது.

eelamhouse.com

# மண்சுமந்தோர்




துயிலுமில்ல விதைப்பொன்றின் பின்னர்
வீடு திரும்பினேன்.
படுக்கை விரித்துவிழ சாமக்கோழி கூவிற்று.
வித்துடல் தோளேற்றி நடந்ததால்
வலித்தது தோளும், மனமும்
தூக்கம் தொலைவாகிப் போனது.
கவிதையொன்று எழுதலாம்
எழுதலாம் எப்படித் தொடங்குவது?
எழுதிச்சென்று எங்கே முடிப்பது?
பாட்டெழுதிப் பாட்டெழுதி
நான்படும் துயர் யாரறிவர்?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்.
பூவள்ளிப் போட்டே புண்ணாச்சு கைகள்.
நிதம் அழுதழுது
நீர் வற்றிப் போனது விழிகள்.
கண்மலரும் காலையொவ் வொன்றும்
வீரச்சாவுடன் தானே விடிகிறது.
இமைமூடும் பொழுதும்
இடிவிழுத்தித்தானே இருள்கிறது.
நிலவு முகம்திருத்திய நிர்மலப்பூங்குஞ்சுகளை
இழவு எடுத்துச்செல்கிறது நாளாந்தம்.
எத்தனை காலத்துக்கென்றுதான் இது?
பத்துப் பரப்பில் விதைக்கத் தொடங்கிய வயல்
ஏக்கர் கணக்காக நீள்கிறது இன்று.
விதைக்கக் குழிதோண்ட வியர்க்கிறது நிலம்.
காற்றின் விழிகளிலும் துளி.
வெள்ளையடித்த கல்லறைகளுக்குள்ளே
பள்ளிகொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல் பிடித்தோடிய நேராய்
வரிசையான நாற்று நடுகை.
எல்லாம் முளைக்குமெனும் எதிர்பார்ப்பு
பொய்யாகவில்லை.
கங்கும், கணையுமாக எங்கும் அரும்புகள்.

ஒருநாள் வந்து
உள்ளே புகுந்தோர் பூவைத்துப்பாரும்.
குழியிருந்து கேட்கும் குரல்,
பார்க்கும் விழி,
துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை இறந்து போனவரென்று?
எவர் சொன்னது எலும்புமுக்கி எருவானாரென்று?
வெளியே வருவதில்லையே தவிர
குழிகளுக்குள்ளே ஒரு ராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தேழு
தேசத்துக்கு உயிர்ப்பெழுதும் நாள்.
சில்லிட்டுப் போகும் நிலம்.
பூக்கொண்டு நடப்போம் புனிதநிழல்.
மெல்ல அருகணைந்து
கல்லறை கழுவுவோம் கண்ணீரால்.
நெய்விளக்கேற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிறப்பர்.
செவிகேட்கச் சிரிப்பர்.
மெளன மொழியில்
பெற்ற மனம் குளிரப் பேசுவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
"மொழியாகி எங்கள் மூச்சாகி" என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப்போய் சிலையாவோம்.
"பணிமுடித்து உறங்குகிறோம்
மீதிவழி முன்செல்வீர்" என
தேவகுமாரரின் அசரீரி கேட்கும்
"எமக்கானது பூவல்ல....
எமக்கானது சுடரல்ல....
எமக்கானது இந்தப்பாடல் மட்டுமல்ல....
எமக்கானது விடுதலை,
எமக்கானது தேசத்தின் விடிவு"
காற்றிலேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்.
ஒளிபெறும் திசையில் பாதை தெளிவுறும்.
வாசல் கடந்து வெளியே வர
நிலம் விடிந்திருக்கும்.
எம் பயணம் தொடரும்
மண்சுமந்தோர் கனவு நனவாகும் வரை.

-புதுவை இரத்தினதுரை

eelamhouse.com




# மாவீரர் மோட்சம்

மரணத்தின் மீதான தேடலின்
தியானத்தில் ஞானமெய்தி
ஞாலத்தின் பெருநிலத்தில்
அலைந்து திரிந்து கரைந்து போனவன்
மீள்- உருப் பெற்று நடந்து வந்தான்,
யாழ்வீதியொன்றில் காவிதரித்து.

சுருங்கிய நெற்றியில் நிறைந்த நீறு
மாவீரம்கண்டு நிமிர்ந்த கூன் முதுகு
ஓங்காரம் மணக்கும் திணறும் மூச்சு.
நைந்து கிழிந்து வெண்ணூல் உடையுடன்
இளகிவழிந்து காய்ந்து போன
மெழுகின் தாரைகளெனக் கண்ணீருடன்
எதிர்ப்பட்டாள் மூதாட்டியொருத்தி.

அம்மையே ஏன் கண்ணீர்?

அம்மையே ஏன் கண்ணீர்?
மாவீரம் கண்ட நெஞ்சம்
தாளாப் பெருமையில் பொங்கியதில்
தளும்பி வழிகிறது கண்ணீர்
எம் மக்கள் மாவீரமெய்துகின்றனர்
புகழ்பாடும் ஈடில்லா வார்த்தைகளின்றி
தமிழ் பொய்த்துவிடுவாளோ!
நெஞ்சம் பதைக்கிறது.

மாவீரரென்றால்....

உள்ளம் உவந்து உயிரைக் கொடையாக்கி
மண்ணைக் கொண்ட கொடியவனைக் கொளுத்தி
விண்ணும் மண்ணும்தான் வசமாகுமே புலிவீறு
கொள்ள தன்னுயிர்ஈந்த தமிழ்மகன் மோட்சத்தில்
ஈழோதயம்.


புரியவில்லை அம்மையே!

ஆங்கொரு சதுக்கமுண்டு மாவீரருக்கென்று
அதனடி அமர்ந்து அர்த்தம் தேடு.

மாவீரர் சதுக்கத்தினடி அமர்ந்து
மீளாத் தவமிருந்தான்,
இரண்டாம் ஞானம் பெற்றான்
புன்முறுவல் இழையோட
மேனிசிலிர்த்தபடி சொல்லிக்கொண்டான்
மாவீரமே மோட்சம்.

– ஜெ. கரிகாலன்
மலேசியா.

eelamhouse.com



# மெழுகுவர்த்திகள்

தன்னை உருக்கி உலகினிருள் அகற்றுவது
மெழுகுவர்த்தி மட்டுமன்று.
தம்மைவருத்தி, தமதுடலைப் பொடியாக்கி,
விடுதலைத்தீபம் ஏற்றும் கருவேங்கைகளும்
மெழுகுவர்த்திகளே - இவர் தம்
இன்னுயிரைமட்டுமல்ல, அதைச் சுமக்கும்
பூவுடலையும்
அதன் உணர்வுகளையும் - இம்
மண்ணுக்கே ஈந்தவர்;
ஆயினும் ஒரு வேறுபாடு - மெழுகுவர்த்தி
உருகி முடிந்தபின் அதன்
ஒளியும் மங்கிவிடும் - ஆனால்
கருவேங்கைகளின் தியாகங்களும்
அவர் தம் வேள்விகளும் இம் மண்ணின்
விடுதலைத் தீபத்தை அணையாது காத்திடும்.
இவர்களின் நாமங்கள் கூட ஒளிவீசும்...
இவர்களின் திருவுருவங்களினின்றும்
ஒளி பிரவாகிக்கும்.

வன்னிக் களமுனையிலிருந்து
ஒரு போராளி.

# உண்மையை உரைத்துவிடு

அம்மா!
தத்தி நடைபயிலும் உந்தன்
தலை மகனுக்காய்
தாலாட்டுப் பாடுகையில்,
எம்மினத்தின் விடிவிற்காய்
தம்முடலை வெடியாக்கும் - எங்கள்
கரும்புலிகள் கதை கூறு.

முற்றத்து மணலில் அமர்ந்து
முழுநிலவைத் தான் ரசித்து
குட்டிக் கதை கேட்கும் - உந்தன்
கடைசி மகளிற்கு,
காற்றினிலே கலந்து நிறுகும் - அந்த
கண்மணிகள் வீரங்கூறு.

மணல் வீடு கட்டி, மண் சோறு சமைத்து
மகிழ்ந்து விளையாடும் உன் மக்களிற்கு
மண்ணினை நேசித்த புதல்வர் - தமிழர்
மானங்காத்த மறத் தமிழ் வீரர்,
கடலிலும் கரையிலும் காவியமாய் ஆனகதையை
கலங்காது கண்டிப்பாய்க் கூறிவிடு.

அம்மா!
மலரினிய கனவுகள் சுமந்த இவர்
மக்களை நேசித்ததால்
ஈழத்தில் விடுதலைத் தென்றல் வீசிட
தேசப்புயலானார், இவரே - என்றும்
எம் வாழ்வின் விடிவெள்ளிகள்
எம் மண்ணின் ஒளிமங்கா மாணிக்கங்கள்
இந்த செய்தியுடன் இன்னும்
உரைக்காத பல உண்மைகளையும்
ஒளிக்காமல் நீ உரைத்துவிடு.

-கா. கார்த்திகா-
போராளி.


eelamhouse.com



# நீர் மட்டும் எப்படி...

விழுவது எல்லாம் விதையாவதல்ல
நீர் மட்டும் எப்படி...

விந்தையான மனிதராய்
விஸ்வரூபம் பெற்றவராய்
நீர் மட்டும் எப்படி...

விடுதலைக்கு முடிசூட்ட
விருப்பம் எமக்கும் தான்
ஆனால் நீர் மட்டும் எப்படி...
விடுதலை மனிதராய்!

நாம் பயணித்த பாதையில்
பயணங்கள் முடியவில்லை
விடியலின் வரவுக்காய் நாம்
வெறும் விரதங்கள் மட்டுந்தான்.
விடைகாணா வினாவுடன்
வீண்பொழுதில் நாமிங்கு
விடையே நாமென்று...
நீர் மட்டும் எப்படி!

தலைவனின் பாசறை புகுந்ததனால் தான்- தமிழினம்
தழைத்திடத் தலைகொடுத்தீரோ!

களத்தினில் இனத்தின் கருவினைக்காத்திட
தமிழ்த்தாய்க் கருவினில் வளர்ந்திடும் மாவீரரே!
புலத்தினில் வாழ்வதைப் புதைத்திட்ட போதிலும்-தாய்
நிலத்தினில் வாழ்ந்திடும் உம்மை
எம் மனதினுள் போற்றியே வணங்குகின்றோமே.

கலை பண்பாட்டுக் கழகம்- ஜேர்மனி

eelamhouse.com

# மாவீரர் நினைவுக் குறிப்பு

## 27.11.1982 தொடக்கம் 31.10.2001 வரை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை

### மாவட்டவாரியாக வீரச்சாவடைந்த மாவீரர்கள்

| யாழ் மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 4711 |
| பெண் மாவீரர் | - 1712 |
| மொத்தம் | - 6423 |

| மட்டு மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 4058 |
| பெண் மாவீரர் | - 428 |
| மொத்தம் | - 4486 |

| வன்னி மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 1737 |
| பெண் மாவீரர் | - 757 |
| மொத்தம் | - 2494 |

| திருமலை மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 1307 |
| பெண் மாவீரர் | - 158 |
| மொத்தம் | - 1465 |

| முல்லை மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 894 |
| பெண் மாவீரர் | - 381 |
| மொத்தம் | - 1275 |

| மன்னார் மாவட்டம் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 803 |
| பெண் மாவீரர் | - 229 |
| மொத்தம் | - 1032 |

| வெளி | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 234 |
| பெண் மாவீரர் | - 63 |
| மொத்தம் | - 297 |



### வீரச்சாவடைந்த கரும்புலிவீரர்களின் எண்ணிக்கை

| தரைக்கரும்புலிகள் | |
|---|---|
| ஆண் தரைக்கரும்புலிகள் | - 60 |
| பெண் தரைக்கரும்புலிகள் | - 18 |
| மொத்தம் | - 78 |

| கடற்கரும்புலிகள் | |
|---|---|
| ஆண் கடற்கரும்புலிகள் | - 115 |
| பெண் கடற்கரும்புலிகள் | - 46 |
| மொத்தம் | - 161 |

| கரும்புலிகள் மொத்த எண்ணிக்கை | |
|---|---|
| ஆண் கரும்புலிகள் | - 175 |
| பெண் கரும்புலிகள் | - 64 |
| மொத்தம் | - 239 |

### எல்லைப்படை மாவீரர் எண்ணிக்கை

| எல்லைப்படை மாவீரர் | |
|---|---|
| ஆண் மாவீரர் | - 276 |
| பெண் மாவீரர் | - 05 |
| மொத்தம் | - 281 |

### ஆண்டுவாரியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 82ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 01 |
| 83ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 15 |
| 84ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 50 |
| 85ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 188 |
| 86ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 318 |
| 87ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 516 |
| 88ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 379 |
| 89ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 418 |
| 90ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 960 |
| 91ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1613 |
| 92ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 788 |
| 93ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 925 |
| 94ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 374 |
| 95ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1504 |
| 96ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1376 |
| 97ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 2101 |
| 98ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1798 |
| 99ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1545 |
| 00ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1981 |
| 01ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 622 |

### மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆண் மாவீரர்கள் | - 13,744 |
| பெண் மாவீரர்கள் | - 3,728 |
| மொத்தம் | -17,472 |

eelamhouse.com

eelamhouse.com



வெளியீடு: அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்

eelamhouse.com